சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

**முன்னிலை : திருமதி.A.பர்சாத் பேகம் பிஏ.எம்.எல்.,**

சார்பு நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்

2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14 -ம் நாள், செவ்வாக்கிழமை.

**அசல் வழக்கு எண்.382/2023**

**CNR.No.TNTT19-001976-2023**

சுபா --- வாதி

/எதிர்/

செல்வநாராயணன் --- பிரதிவாதி

இவ்வழக்கானது, இந்நீதிமன்றத்தின் முன்பாக 17.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.அமிர்தவள்ளி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.விஸ்வநாதன் அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதவுரை கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கானது, இந்த வழக்கின் வாதிக்கு பராமரிப்பு தொகையாக மாதம் ரூ.10,000/-ஜீவனாம்சமாக பிராது தேதி முதல் கொடுக்க வேண்டியும் மற்றும் அதற்கு தபசில் சொத்துக்களில் பிரதிவாதிக்குரிய 1/4 பங்கினை பொறுத்து Charge Decree பிறப்பித்து வழங்கி உத்தரவிடும்படிக்கும், இந்த வழக்கு தபசில் சொத்துக்களில்

பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1/4 பாகத்தை பொறுத்து பிரதிவாதி எந்தவித வில்லங்க விற்கிரையமோ செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடும்படிக்கும், இந்த வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதியிடமிருந்து கிடைக்கும்படிக்கும், மற்றும் இதர பரிகாரங்கள் வழங்கி உத்தரவிட வேண்டியும் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 1 -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரையின் சுருக்கம்** :-

வாதிக்கும் பிரதிவாதிக்கும் 07.06.1998 ம் தேதியில் பொட்டலூரணி கிராமத்தில் உள்ள பிரதிவாதியின் வீட்டில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்தின்போது சீதனமாக 20 பவுண் நகை வழங்கப்பட்டது. பிரதிவாதியின் குடும்பத்திற்கு ரொக்கமாக ரூ.20,000/- வாதியின் குடும்பத்தினாரால் வழங்கப்பட்டது. திருமணத்திற்கு பின்னர் வாதியும் பிரதிவாதியும் பிரதிவாதியின் ஊரான பொட்டலூரணியில் குடும்பமாக வசித்து வந்தனர். திருமணத்திற்கு முன்பிருந்தே பிரதிவாதிக்கு குடிப்பழக்கம் இருந்துள்ளது. மேற்படி குடிப்பழக்கத்தை மறைத்து வாதிக்கு திருமணம் செய்து வைத்துள்ளனர். திருமணம் முடிந்து ஆரம்பம் முதலே குடித்து விட்டு வந்து வாதியிடம் அடிக்கடி சண்டை போடுவதை வாடிக்கையாக வைத்திருந்தார். குடித்து விட்டு அவதூறான வார்த்தைகளால் பேசுவதும் உடல் ரீதியாகவும் துண்புறுத்துவதையும் வாடிக்கையாக வைத்திருந்தார். வாதியும் பொறுத்துக்கொண்டு குடும்ப வாழ்க்கை நடத்தி வந்தார். பிரதிவாதி வாதிக்கு தேவையான பராமரிப்பு தொகையை வழங்குவதில்லை. வீட்டுக்கு தேவையான எந்த

ஒரு பொருளும் வாங்கித்தருவதில்லை. வாதியும் எந்த வேலைக்கும் செல்லாமல் வீட்டு மனைவியாகவே வாழ்ந்து வருவதால் வருமானம் இன்றி கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தார். பிரதிவாதியின் கொடுமைகள் தாங்காமல் பெரியோர்கள் ஏற்பாட்டின் பேரில் வாதியும் பிரதிவாதியும் கடந்த 2008ம் ஆண்டில் வள்ளியூரில் வசித்து வந்தார்கள். அங்கு பிரதிவாதி பழக்கடை வைத்து தொழில் செய்ய வேண்டுமென்று கூறி வாதிக்கு பாத்தியப்பட்ட 15 பவுண் நகைகளை பிரதிவாதி வாங்கி வங்கியில் அடமானம் வைத்துள்ளார். வாதியின் நகைகளை திருப்பி கொடுக்காமல் பின்பு வாதியை பிரதிவாதி கொடுமை செய்ததால் வாதி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பிரதிவாதி மீது புகார் கொடுத்துள்ளார். அந்த விசாரணைக்கு ஆஜரான பிரதிவாதி இனிமேல் ஒழுங்காக வாழ்வதாக கூறி மன்னிப்பு கேட்டு கடிதம் எழுதி கொடுத்ததால் அந்த புகாரை முடித்துக்கொண்டு வாதி பிரதிவாதியுடன் மீண்டும் வாழ்ந்து வந்தார். அதன் பின்னர் சில தினங்கள் பிரச்சனை செய்யாமல் இருந்து வந்த பிரதிவாதி பின்னர் மறுபடியும் தினமும் குடித்து விட்டு வாதியை துன்புறுத்தினார். எந்த வேலைக்கும் செல்லாமல் பிரதிவாதியின் பெற்றோர்களை மிரட்டி பணம் வாங்கி மது அருந்துவதை வாடிக்கையாக வைத்துள்ளார். வாதி உணவு மற்றும் அடிப்படை தேவைகளுக்கு பணம் இல்லாமல் மிகுந்த கஷ்டத்துடன் வாழ்ந்து வந்தார். பிரதிவாதியின் கொடுமைகள் தாங்காமல் 2008ம் வருடத்தில் புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பிரதிவாதி மீது புகார் கொடுத்துள்ளார். அந்த விசாரணையின் பிரதிவாதி காவல் நிலையம் ஆஜராகி புகார் கொடுத்தார். அந்த விசாரணையிலும் பிரதிவாதி காவல் நிலையம் ஆஜராகி மன்னிப்பு கேட்டு ஒழுங்காக

குடும்பம் நடத்துவதாக கூறியதால் மனு முடித்து வைத்து அதன் பிறகு சில காலம் அமைதியாக வாழ்ந்து வந்து மீண்டும் அவ்வப்போது மது அருந்துவதை வாடிக்கையாக வைத்து நாளடைவில் வழக்கமாக நடைமுறைக்கு பழக்கமாகி மது அருந்திவிட்டு வேலைக்கு செல்லாமல் வாதியை அடித்து துண்புறுத்தியுள்ளார். பிரதிவாதியின் கொடுரமான செயலால் சித்ரவதை அனுபவித்து வந்த வாதி பிரதிவாதியை விட்டு பிரிந்து கடந்த 4 வருடங்களாக தனியாக வாழ்ந்து வருகிறார். எந்த நிரந்தர வேலையும் இல்லாமல் அவ்வப்போது கிடைக்கும் கூலி வேலை செய்து குறைவான வருவாயோடு கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். வாதிக்கு தைராய்டு ரத்தகொதிப்பு நோய்வாய்பட்டு அவருடைய சகோதரரின் பாதுகாப்பில் இருந்து வருகிறார். வாதியின் தகப்பனார் காலமாகி விட்டார். தாயார் 75 வயதான நோய்வாய்ப்பட்டவர் வாதியின் சகோதரரும் தனியாக வசித்து வருகிறார். வாதி நோய்வாய்ப்பட்டு கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். பிரதிவாதி பெங்களூரில் வேலை பார்த்து மாதம் ரூ.30,000/- சம்பாதித்து வருகிறார். விவசாயம் மூலம் பிரதிவாதிக்கு ஒரு வருடத்திற்கு ரூ.1,00,000/- வரை வருமானம் கிடைத்து வருகிறது. வாதி மத்தியஸ்தர்கள் மூலம் பிரதிவாதியை அனுகி தன்னை பராமரிக்க ரூ.10,000/- கொடுக்க கேட்டபோது பிரதிவாதி கொடுக்க மறுத்துவிட்டார். பிரதிவாதியின் தந்தை இறப்பிற்கு பிறகு வழக்கின் தபசில் சொத்துக்களை பிரதிவாதியின் பங்கை பொறுத்த மட்டும் வாதிக்கு பராமரிப்பு தொகை கிடைப்பதிலிருந்து தடுக்கும் விதமாக அதனை விற்பனை செய்ய மும்முரமாக செயல்பட்டு வருகிறார். பராமரிப்பு தொகையாக ரூ.10,000/-த்தை வழங்க இந்த நீதிமன்றம் உத்தரவிடக்கேட்டு தொகை செலுத்ததாக பட்சத்தில் பராமரிப்பு

தொகையில் கூடுதல் தொகைகளை பெற்று சரி கட்டும் வகைக்கு தபசில் சொத்தில் பிரதிவாதியின் பங்கான 1/4 பங்கை பற்றுகை செய்ய உத்தரவிடும்படி கேட்டு இந்த தாவா.

**3. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம்**

வாதியின் வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. வழக்குரையில் சொல்லியிருக்கும் சங்கதிகள் உண்மையல்ல. வாதிக்கும் பிரதிவாதிக்கும் 07.06.1998 ம் தேதியில் திருமணம் நடந்தது உண்மை . ஆனால் திருமணத்தின்போது சீதனமாக 20 பவுண் நகையும், ரொக்கமாக ரூ.20,000/- வழங்கப்பட்டதாக சொல்வது உண்மையல்ல. பிரதிவாதி குடித்து விட்டு வந்து வாதியை அடித்து கொடுமைப்படுத்தியதாக சொல்வது உண்மையல்ல. வாதி பிரதிவாதியுடனான திருமணமான காலத்திலிருந்து பிரதிவாதியை மதித்து பேசுவது கிடையாது. கணவர் என்கிற முறையில் அவருக்கு பணிவிடை செய்தது கிடையாது. அடிக்கடி சண்டை போட்டு விட்டு பெற்றோர் மற்றும் சகோதரரின் பேச்சை கேட்டுக்கொண்டு வருடத்தில் பெரும்பாலான நாட்கள் பிரதிவாதியை பிரிந்து பெற்றோர் வீட்டில் இருந்து கொள்வார். பிரதிவாதி அவர் வயதான பெற்றோர் இருக்கும் வரை அவர்களிடம் சாப்பிட்டு வந்துள்ளார். பிரதிவாதியை எவ்வித காரணமும் இல்லாமல் தன்னிச்சையாக பிரிந்து வாழ்ந்து வருகிறார். பிரதிவாதி வாதிக்கு உடல் அளவிலும் மனதளவிலும் எந்த தீங்கும் செய்யவில்லை. பிரதிவாதி வேலை செய்து வைத்திருக்கும் பணத்தை வைத்து ஆடம்பரமாக செலவு செய்தும் தனது பெற்றோருக்கும் கொடுத்து வந்தார். இது பற்றி பிரதிவாதி கேட்கும்

போதெல்லாம் சண்டை போட்டு வந்தார். வாதிக்கும் பிரதிவாதிக்கும் திருமணத்தின் பயனாய் ஒரு வருடத்தில் ஒரு ஆண்குழந்தை பிறந்து அதை சரியவர கவனிக்காமல் அந்த குழந்தை இறந்துவிட்டது. அதன் பிறகு வாதி பிரதிவாதியிடம் எவ்வித அனுசரணையும் அன்பாகவும் பாசமாகவும் இல்லாமல் பிரதிவாதியிடம் சண்டை போட்டுக்கொண்டு அவரது பெற்றோர் வீட்டில் போய் இருந்து கொண்டார். வாதிக்கு பாத்தியப்பட்ட நகைகளை பிரதிவாதி அடமானம் வைத்து செலவு செய்ததாக சொல்வது உண்மையல்ல. வாதிக்கு பாத்தியப்பட்ட நகைகளை அடமானம் வைத்தும் சில நகைகளை பெருங்குளம் கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்து அந்த பணத்தை கொண்டு தம்பியின் படிப்பு செலவுக்கும் தாயாரின் மருத்துவ செலவுக்கும் பயன்படுத்தி கொண்டுள்ளார். பிரதிவாதி தற்போது சோரியாசிஸ் நோயால் 5 வருட காலமாக தன்னை பராமரிக்க முடியாமல் சாப்பாட்டிற்கே கஷ்டமான சூழ்நிலையில் இருந்து வருவதை வேண்டுமென்றே மறைத்து பிரதிவாதியை பிரிந்து தன்னிச்சையாக தனியாக தனது தாயாருடன் குடியிருந்து வருகிறார். வாதி தற்போது குடியிருந்து வரும் பொட்டலூரணி ஜோதிநகர் கதவு எண்.8/304 என்ற எண் கொண்ட வீடு ரூ.20,00,000/- செலவழித்து வாதியால் கட்டப்பட்டு அந்த வீட்டில் தன் தாயாருடன் வசித்து வருகிறார். பிரதிவாதி சோரியாசிஸ் நோயால் கடந்த 2019ம் வருடம் பாதிக்கப்பட்டு முருகேசன் என்ற சித்த மருத்துவரிடம் 5 வருடங்களாக சிகிச்சை பெற்று பார்க்கவே அறுவறுப்பாக இருந்ததால் வாதி அவரை உதாசீனப்படுத்தி விட்டு ஒதுக்கி விட்டு அவரை கவனிக்காமல் 5 வருடங்களுக்கு முன்பாகவே பிரிந்து தன் தாயாருடன் தன்னிச்சையாக அவருக்கு பாத்தியப்பட்ட

வீட்டில் வசித்து வருகிறார். வாதியின் தம்பி B.E முடித்து விட்டு வெளிநாட்டில் ரூ.3,00,000/- சம்பளத்திற்கு வேலை பார்த்து தனது சகோதரியான வாதிக்கு மாதம் ரூ.30,000/- அனுப்பி வருகிறார். வாதி பொட்டலூரரணி அருகே கொம்புகார நத்தம் கிராமத்தில் சாக்லேட் கம்பெனியில் பணிபுரிந்து வருபவர்களுக்கு கேன்டீன் நடத்தி வந்து மாதம் ரூ.50,000/-ற்கு மேல் வருமானம் வருகிறது. மேலும் பொட்டலூரணி கிராமத்தில் சுரபி என்ற பெயரில் ஹோட்டல் நடத்தி மாதம் ரூ.30,000/- வருமானம் பெற்று ஆட்களை வேலைக்கு அமர்த்தி வெள்ளாடு கோழிப்பண்ணை வைத்து அதன் மூலமும் வருமானம் பெற்றுவருகிறார். மொத்தத்தில் வாதிக்கு ரூ.1,00,000/-ற்கு மேல் வருமானம் வருகிறது. தன்னைத்தானே பராமரித்து வசதியாக வாழ்ந்து வருகிறார். எல்லை நாயக்கன் பட்டி பஞ்சாயத்தில் 5 வது வார்டு உறுப்பினராக இருந்து வருகிறார். பிரதிவாதி அவரது மனைவியான வாதியிடம் ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்ய ஏற்பாடு செய்ததை அறிந்து வாதி முந்திக்கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி சாப்பாட்டிற்கே வழியில்லாமல் கஷ்டமான சூழ்நிலையில் வசித்து வருகிறார். வாதி தான் பிரதிவாதியை பராமரிக்க கடமைப்பட்டவர். தபசில் சொத்துக்கள் பிரதிவாதியின் தாத்தா பெயரில் கூட்டு குடும்ப சொத்தாகவே இருந்து வருகிறது. பிரதிவாதிக்கு எந்த பங்கும் இல்லை. அதில் வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. பிரதிவாதி நோய்வாய்ப்பட்டு தன்னை தானே பராமரிக்க இயலாத சூழ்நிலையில் இருந்து வருவதால் பிரதிவாதியின் பராமரிப்பு செலவுக்காக மாதா மாதம் ரூ.10,000/-மும் வழக்கு செலவு தொகையாக ரூ.10,000/-மும் கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம்

உத்தரவிடவேண்டியது அவசியமாக இருக்கிறது. என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. வாதியின் வழக்குரை, பிரதிவாதியின் எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கடந்த 14.02.2024 அன்று கீழ் கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1 | **Whether the plaintiff is entitled to a decree for maintenance as sought in the plaint?** |
| 2 | **Whether the plaintiff is entitled to the reliefs of permanent injunction as sought in the plaint?** |
| 3 | **Whether the plaintiff is entitled to any other relief?** |

**5**. வாதி தரப்பில் இந்த வழக்கின் வாதி திருமதி.சுபா வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ-6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி திரு.செல்வநாராயணன் பி.வா.ச 1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6.** இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

**7. தீர்வு**

**எழுவினா 1ற்கான தீர்வு**

| | |
|---|---|
| 1 | **Whether the plaintiff is entitled to a decree for maintenance as** |

| | |
|---|---|
| | **sought in the plaint?** |

வாதியின் வழக்கினை நிரூபிக்கும் பொருட்டு வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது முதல் விசாரணை சாட்சியத்தை எழுத்துமூல நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளார். வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே 7.6.1998 ம் தேதியில் நடந்த திருமணத்தை நிரூபிக்கும் பொருட்டு திருமண பத்திரிக்கை அசல் வா.சா.ஆ-1 ஆகவும், வாதியும் பிரதிவாதியும் திருமணத்தின்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் வா.சா.ஆ.2 ஆகவும், தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியும் பிரதிவாதியும் கணவன் மனைவி என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. எனவே ஆவணம் குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**8**. வா.சா.1 அவரது சாட்சியத்தில் வாதி பிரதிவாதியின் மனைவி என்ற முறையில் பிரதிவாதியிடம் ஜீவானம்சம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியும், பிரதிவாதியும் திருமணத்திற்கு ஆன பிறகு இருவரும் சேர்ந்து வாழ்ந்த சமயத்தில் பிரதிவாதி குடித்து விட்டு வந்து வாதியை அடித்து சண்டை போட்டு தன்னைஅடித்து மனதளவிலும் உடல் அளவிலும் துன்புறுத்தியதாகவும் வாதியை பராமரிக்கவில்லை என்றும் வாதிக்கு உணவுக்கு கூட பணம் இல்லாமல் கஷ்ட ஜீவனம் செய்ததாகவும் சொல்லியுள்ளார். 2008 ம் வருடத்தில் வள்ளியூரில் வைத்து தொழில் செய்ய வேண்டுமென்று சொல்லி 15 பவுன் நகைகளை வாங்கி அடமானம் வைத்து திரும்ப கொடுக்கவில்லை. பிரதிவாதி மீது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாகவும் அங்கு வைத்து பிரதிவாதி

மன்னிப்பு கடிதம் எழுதிக் கொடுத்ததன் பேரில் மீண்டும் பிரதிவாதியுடன் சேர்ந்து வாழ்ந்ததாகவும் அதன் பின்னரும் பிரதிவாதி குடித்து விட்டு வந்து அடித்து சண்டை போட்டு ஏசி பேசி வந்ததாகவும் அதனால் மீண்டும் 2008 ம் வருடத்தில் புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அங்கும் மன்னிப்பு கேட்டு ஒழுங்காக குடும்பம் நடத்துவதாக உறுதியளித்து அதன் பிறகு சிறிது காலம் அமைதியாக வாழ்ந்து மீண்டும் குடிக்க ஆரம்பித்து பிரதிவாதி வேலைக்கு செல்லாமல் வாதியை அடித்து துண்புறுத்தி கொடுமைப்படுத்தி வந்ததால் வாதி பிரதிவாதியை விட்டு பிரிந்து கடந்த 4 1/2 வருங்களாக தனியாக வாழ்ந்து வருவதாகவும் சொல்லியுள்ளார்.

**9**. மேலும் அவரது சாட்சியத்தில் தற்போது கூலி வேலை செய்து குறைந்து வருவாயோடு கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும் தைராய்டு, ரத்த கொதிப்பு, சர்க்கரை நோய் ஆகிய நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ செலவுக்கு கூட பணம் இல்லாமல் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும் தன்னைத்தானே பராமரிக்க முடியாது சூழ்நிலையில் இருப்பதாகவும் அதே சமயம் பிரதிவாதி பெங்களூரில் உள்ள தனது தங்கை நடத்தி வரும் மிட்டாய் கடையில் வேலை பார்த்து மாதம் ரூ.30,000/- ரூபாய் பெற்று வருவதாகவும் மேலும் பிரதிவாதிக்கு விவசாய வருமானம் மூலம் வருடத்திற்கு ரூ.1,00,000/- கிடைப்பதாகவும் சாட்சியம் சொல்லியுள்ளார்.

**10**. மேற்படி சங்கதிகளை நிரூபிக்கும் பொருட்டு பிரதிவாதியின் பெயரில் உள்ள பட்டா வா.சா.ஆ-4, 5 ஆகவும் தபசில் சொத்துக்களுக்கான வில்லங்க சான்று வா.சா.ஆ.6 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிக்கு குடிப்ப பழக்கம் உள்ளது

என்றும் குடித்துவிட்டு வந்து வாதியை அசிங்கமாக ஏசி, பேசி, அடித்து மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் கொடுமைகள் செய்ததாக சொல்லியுள்ள வாதி அதனை ஆவணம் தாக்கல் செய்து நிரூபிக்கவில்லை. வாதியின் வழக்கை ஆட்சேபித்துள்ள பிரதிவாதி பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சியத்தில் வாதியை அடித்து துண்புறுத்தவில்லை எனவும் வாதியின் நகைகளை பிரதிவாதி அடமானம் வைத்துவிட்டதாக சொல்லியுள்ளதையும் மறுத்துள்ளார். அவருடைய சாட்சியத்தில்

**நான் என் சகோதரியின் கடையில் பணிபுரிந்து அதன் மூலம் மாதம் ரூபாய் முப்பதாயிரம் ஈட்டி வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வேலை செய்யும் அளவிற்கு ஆரோக்கியம் இல்லை.**

என சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பெருங்குளம் கூட்டுறவு கிராம வங்கியில் வாதி பெயரில் வழங்கியுள்ள ரசீது நகை மதிப்பீடு கட்டணம் ரசீது மற்றும் கல் கம்மல் 2 ரூ.600/-க்கு அடமானம் வைத்து சீட்டு கடன் அட்டை பி.வா.சா.ஆ.4 அக தாக்கல் செய்துள்ளார்.. மேற்படி ஆவணம் வாயிலாக பிரதிவாதி வாதியின் நகைகளை அடமானம் வைத்துள்ளதாக சொல்லியுள்ள சங்கதி பொய்பிக்கப்பட்டுள்ளது.

**11**. மேலும் பிரதிவாதி தனது சாட்சியத்தில்

**தாவா சொத்து எனக்கு சொந்தமான எனது தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அது என் தாத்தா பெயரில் உள்ள சொத்தாகும். எனக்கு ஏற்பட்ட நோய்க்கு மருத்துவம் செய்வதற்காக செலவிற்காக அந்த சொத்தில் சில பகுதிகளை கிரையம் செய்துவிட்டனர்.**

என சொல்லியுள்ளார். மேலும் வாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் பி.வா..சா.ஆ.1 எனவும் வாதியின் பெயரில் உள்ள வீட்டிற்கான பட்டா

பி.வா.சா.ஆ.2 ஆகவும் , வாதி தொழில் நடத்தி வரும் சுரபி பெயர் பலகை கொண்ட ஹோட்டல் அமைந்துள்ளதை காட்டும் கட்டிடத்திற்கான புகை படங்கள் பி.வா.சா.ஆ-3 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். பி.வா.சா.ஆ.3 புகைப்படத்தில் உள்ள சுரபி என்ற பெயரில் உள்ள ஹோட்டல் வாதியால் நடத்தப்பட்டு வரும் கடை என நிரூபிக்கும் பொருட்டு வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. புகைப்படத்தை மட்டும் வைத்துக்கொண்டு வாதி நடத்தி வரும் கடை என தீர்மானிக்க முடியாது என்ற வாதிதரப்பு வாதுரையை இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 வாயிலாக வாதி குடியிருந்து வரும் வாதி வீடு வாதிக்கு சொந்தமானது என இந்த நீதிமன்றம் நம்பி ஏற்றுக்கொள்கிறது.

**12.** மேலும் பி.வா.சா.1 அவருடைய சாட்சியத்தில்

> வாதி எனது மனைவி என்ற காரணத்திற்காக நான் அவருக்கு சட்டப்படி ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வேலைக்கு செல்லாமல் வருமானம் இல்லாமல் இருந்து வருவதால் வாதிக்கு ஜீவனாம்சம் கொடுக்க இயலாத நிலையில் இருந்து வருகிறேன்.

என சொல்லியுள்ளார். மேலும், அவருக்கு சோரியாசிஸ் நோய் உள்ளதை நிரூபிக்கும் பொருட்டு அவருடைய புகைபடம் மற்றும் மருத்துவ சான்றிதழ் பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்துள்ளார். மேற்படி புகைபடத்திற்கான குறுந்தகடுகள் புகைப்படத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி சோரியாசிஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதை அவரது புகைப்படம் உறுதி செய்கிறது. பிரதிவாதியின் சாட்சியத்தின் வாயிலாக பிரதிவாதிக்கு சோரியாசிஸ் நோய் உள்ளது என்பதால் வாதி பிரதிவாதியை பிரிந்து அவரை உதாசீனப்படுத்தி பிரிந்து சென்றுவிட்டார் என

அனுமானிக்க கூடிய வகையில் உள்ளது. உபய வாதிகளின் சாட்சியத்தின் வாயிலாகவும் சான்றாவணங்கள் வாயிலாகவும் வாதிக்கு தன்னைத்தானே பராமரிக்க போதுமான வசதி வாய்ப்பு உள்ளதாகவும் பிரதிவாதி தன்னைதானே பராமரிக்க இயலாத சூழ்நிலையில் நோய்வாய்பட்டு உள்ளதாகவும் துலங்குகிறது. வாதியை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது

> நான் பொட்டலுரணி ஊரில் உள்ள கொம்புக்காரநத்தத்தில் ஒரு சாக்லெட் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. கூலிக்கு வேலை செய்து வருகிறேன்.
> நான் பொட்டலூரணி கிராமத்தில் சுரபி என்ற ஹோட்டல் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஹோட்டல் மூலம் மாதம் ரூபாய் முப்பதாயிரம் வருமானம் வருகிறது என்றால் சரியல்ல.
> நான் வெள்ளாடு கோழிப்பண்ணை வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 20 கோழியும் 4 வெள்ளாடும் வைத்துள்ளேன்.
> நான் பொட்டலூரணி ஊரில் எல்லைநாயக்கன்பட்டி பஞ்சாயத்தில 4 வது வார்டு உறுப்பினராக இருந்து வருகிறேன்.
> நான் தற்போது வசித்து வரும் வீடு என் சொந்த வீடு என்று சொன்னால் வெளி நாட்டில் இருககும் எனது இளைய சகோதரர் அனுப்பிய பணத்தில் கட்டிய வீடாகும்.

என சாட்சியம் சொல்லியுள்ளார். எனவே வாதிக்கு கால்நடை வளர்ப்பு வாயிலாகவும் கூலிவேலை செய்தும் மேலும் பஞ்சாயத்து மெம்பர் என்ற வகையிலும் வாதிக்கு தன்னைத்தானே பராமரிக்க போதுமான வசதி வாய்ப்பு உள்ளதாக இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13**. மேலும் வாதி தனது குறுக்கு விசாரணையில்

பிரதிவாதியை இன்று காலை நான் பார்த்தேன் அவர் நல்ல நிலைமையில் தான்

இருக்கிறார். அவருக்கு எந்த ஒரு நோயும் இல்லை. நான் அவருக்கு எந்த நோயும் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எனது கணவர் என்னை வைத்து வாழ்வதற்கு விருப்பத்தோடு தான் இருக்கிறார். ஆனால் அவருக்கு சோரியாசிஸ் நோய் இருப்பதால் தான் நான் அவரை விட்டு விலகி இருக்கிறேன் என்றால் சரியல்ல.

என சாட்சியம் சொல்லியுள்ளார். பிரதிவாதியின் புகைப்படங்கள் மற்றும் மருத்துவசான்று வாயிலாக பிரதிவாதிக்கு சோரியாசிஸ்* நோய் உள்ளது நிரூபணம் செய்யப்பட்ட வகையில் வாதி சொன்ன சாட்சியம் உண்மைக்கு புறம்பானது என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. பி.வா.சா.ஆ.5 புகைப்படம் குறித்து வாதி எந்த விளக்கமும் விவரமும் தெரிவிக்கவும் இல்லை. அவ்வாறான சூழ்நிலையில் பிரதிவாதி நல்ல நிலையில் உள்ளார் என்ற சாட்சியம் பொய்யானது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வாதியின் நகைகளை பிரதிவாதி அடமானம் வைத்துள்ளதாக சொல்லியுள்ளதையும் வாதி நிரூபிக்கவில்லை. ஆனால் வாதி தரப்பில் அடமானம் வைத்துள்ளதாக பிரதிவாதி நகை கடன் சீட்டு தாக்கல் செய்து வாதியின் சாட்சியத்தை பொய்பித்துள்ளார்.

**14**. பிரதிவாதி அவரது சகோதரியின் மிட்டாய் கடையில் வேலை பார்த்து மாதம் ரூ.30,000/- சம்பளம் ஈட்டி வருவதாக வாதி வாதுரையிலும் அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் பிரதிவாதியின் உறவினர் நடத்தும் ஒரு மிட்டாய் கடையில் வேலை பார்ப்பதாகவும் முன்னுக்கு பின் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்தபோது " எனக்குவேலை செய்யும் அளவிற்கு ஆரோக்கியம் இல்லை " என சாட்சியம் அளித்துள்ளார். மேலும் .

வாதி எனது மனைவி என்ற காரணத்திற்காக நான் அவருக்கு சட்டப்படி ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வேலைக்கு செல்லாமல் வருமானம் இல்லாமல் இருந்து வருவதால் வாதிக்கு ஜீவனாம்சம் கொடுக்க இயலாத நிலையில் இருந்து வருகிறேன்.

என சாட்சியம் சொல்லியுள்ளார். எனவே பிரதிவாதிக்கு வாதி கூறுவது போல் 30 ஆயிரம் வருமானம் வருவதாக துலங்கவில்லை எனவும் பிரதிவாதியின் வருமானம் குறித்து வாதி நிரூபிக்கவில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**15**. வழக்கு சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என வா.சா.ஆ.4,5 தாக்கல் செய்துள்ள போதிலும் அது கூட்டு குடும்ப சொத்து என்றும் அதில் இந்த பிரதிவாதிக்கு எவ்வளவு பாத்தியம் அதன் மதிப்பு எவ்வளவு என்றும் துலங்கவில்லை. பிரதிவாதிக்கு 1/4 பாகம் பாத்தியப்பட்டது என்று வழக்குரையில் சொல்லியுள்ள போதிலும் வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 4,5 ல். புல எண்.206/6 ல் 0.10.00 ல் 6 பேர் கூட்டு பட்டாதாரர்களாக காண்பிக்கப்பட்டுள்ளார்கள். எனவே பிரதிவாதிக்கு வழக்கு சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் என்பது பற்றி தனிப்பட்ட உறுதியான சாட்சியம் வாயிலாக வாதி நிரூபிக்கவில்லை. வாதி தரப்பில் தபசில் சொத்துக்களில் பிரதிவாதிக்கு தனிப்பட்ட வருமானம் உள்ளதாக நிரூபிக்க தவறிவிட்டதாலும் வாதி தன்னைத்தானே பராமரிக்க போதுமான வசதி வாய்ப்புடன் உள்ளார் என்பதாலும் இந்த வழக்கில் வாதி கூலி வேலை செய்து வருவதாகவும் ஆடு மாடு கோழி வளர்த்து வருமானம் ஈட்டி வருவதாக துலங்குவதாலும் வாதி தன்னைத்தானே பராமரிக்கும் வசதி வாய்ப்புடன் இருந்து வருகிறார் என்று அறியமுடிகிறது.

**16**. அதே சமயம் பிரதிவாதி சோரியாசிஸ் நோய்க்காக வைத்தியம் செய்து வருகிறார் என்றும் அவர் வேலை செய்யும் நிலையிலும், இல்லை என்பதாலும் உடல் நிலை கருதியும் பிரதிவாதி மாதம் 30 ஆயிரம் வருமானம் ஈட்டி வருவதாக சொல்வது ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை. எனவே வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணம் வாயிலாகவும் பிரதிவாதியின் வருமானம் நிரூபிக்கப்படவில்லை என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**17.** பிரதிவாதி கணவர் என்ற முறையில் வாதியை பராமரிக்க கடமைப்பட்டவர் என்றாலும் இந்த பிரதிவாதிக்கு அதற்கான போதுமான வசதி வாய்ப்பு இல்லை என்பதும் வாதிக்கு தன்னைத்தானே பராமரிக்க போதுமான வசதி வாய்ப்பு உள்ளது என்றும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே வாதி கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 1 வாதிக்கு எதிராக விடை காணப்படுகிறது.

**18. எழுவினா 2 ற்கான தீர்வு**

| | |
|---|---|
| 2 | **Whether the plaintiff is entitled to the reliefs of permanent injunction as sought in the plaint?** |

எழுவினா 1ல் கண்ட விவாதத்தின் அடிப்படையில் வாதிக்கு ஜீவனாம்சம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்பட்டுள்ளதால் தபசில் சொத்துக்களை பொறுத்து வாதி கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினாவிற்கு விடை காணப்படுகிறது.

**19. எழுவினா 3 ற்கான தீர்வு**

| | |
|---|---|
| 3 | **Whether the plaintiff is entitled to any other relief?** |

வேறு பரிகாரங்கள் வழங்கக்கூடிய வகையில் தனது வழக்கை வாதி வனைந்து கொள்ளவில்லை. மேலும் இவ்வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு பிரதிவாதி சோரியாசிஸ் நோயால் பாதிக்கப்பட்டு வேலைக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளதால் பிரதிவாதிக்கு வழக்கு செலவுத்தொகை வழங்க வேண்டுமென்று , இந்த எழுவினாவிற்கு இவ்வாறாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது

**முடிவாக வாதியின் வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14 ஆம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.10.14 16:32:49 +0530

சார்பு நீதிபதி,
திருவைகுண்டம்

**வாதி தரப்பு சாட்சி -**

வா.சா.1 - திருமதி.சுபா

**வாதி தரப்பு சான்றாவணங்கள் -**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 07.06.1998 | வாதிக்கும் பிரதிவாதிக்கு இடையே நடந்த திருமணத்தின் திருமண பத்திரிக்கை அசல் |
| வா.சா.ஆ.2 | - | வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே நடந்த |

திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம்

வா.சா.ஆ.3 - வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல்

வா.சா.ஆ.4 -- பட்டா எண்.288 ன் கணிணி வழி நகல்

வா.சா.ஆ.5 - பட்டா எண்.1394 ன் கணிணி வழி நகல்

வா.சா.ஆ.6 - தபசில் சொத்துக்களை பொறுத்த வில்லங்க சான்றிதழ்

**பிரதிவாதி தரப்பு சாட்சி -**

பி.வா.சா.1 - திரு.செல்வநாராயணன்

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் -**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | - | வாதியின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது |
| பி.வா.சா.ஆ.2 | - | வாதியின் பெயரில் உள்ள வீட்டிற்கான பட்டா அசல் |
| பி.வா.சா.ஆ.3 | - | வாதி ஹோட்டல் தொழில் நடத்தி வருவதை காட்டும் கடையின் புகைப்படம் எண்ணம் 2 அசல் |
| பி.வா.சா.ஆ.4 | | வாதியின் பெயரில் பெருங்குளம் கூட்டுறவு வங்கியில் நகை அடமானம் வைக்கப்பட்டதற்கான ரசீது - அசல் |
| பி.வா.சா.ஆ.5 | - | பிரதிவாதிக்கு சோரியாசிஸ் நோய் இருப்பதை காட்டும் புகைப்படம் எண்ணம் 2 |
| பி.வா.சா.ஆ.6 | - | பிரதிவாதி சோரியாசிஸ் நோயிக்கு மருத்துவம் பார்த்ததற்கான மருத்துவ சான்றிதழ். |

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.10.14 16:32:56 +0530

சார்பு நீதிபதி,

திருவைகுண்டம்.

சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்,

அ.வ.எண்.382/2023

அசல்/வரைவு தீர்ப்புரை

நாள் 14.10.2025